# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ.்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 20728/SCIC/2022**

திரு கணேஷ் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வண்டலூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 23.09.2021 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஓட்டேரி, பீர்க்கன்கரணை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். வண்டலூர் தாலூக்கா பண்டூர் கிராமம் புலஎண்.117/20 மற்றும் புதுபுலஎண். 117/1A1 1985 முதல் இன்று வரை எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும் யார்யாருடைய பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், அவர்களுடைய பெயர், புலஎண், பட்டா

எண், பட்டா மாறுதலுக்கான விண்ணப்ப எண் என்பன போன்ற தகவல்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 22.10.2021 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 29.10.2021 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 09.11.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 20728/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க 09.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 09.10.2023 மற்றும் 20.01.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 23.02.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது நேரடி விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 09.06.2025 தேதியிட்ட நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு ச. கதிரவன், பொதுத் தகவல் அலுவலர் / வட்ட சார்ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், வண்டலூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 23.09.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் 09.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், வட்ட சார்ஆய்வாளரால் 20.01.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 23.02.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. மனுதாரர் தான் கோரிய தகவல்களில் இனம் 1 மற்றும் 2க்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இனம் 3க்கு தகவல்கள் ஏதும் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். மேலும், இனம் 3ல் வண்டலூர் தாலுகா பாண்டூர் கிராமம் பட்டாஎண். 437 ஆனது எதனடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்து தான் தகவல்கள் கோரியுள்ளதாகவும், அதுகுறித்து தனக்கு தகவல் வழங்குமாறும் மனுதாரர் விசாரணையின்போது ஆணையத்தின் முன் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய இனம் 3க்கான தகவல்களை

வழங்குவதில் தனக்கு காலஅவகாசம் வழங்கவேண்டும் என்று ஆணையத்தின் முன் கோரினார்.

6. எனவே, **மனுதாரர் கோரிய இனம் 3க்கான திருத்திய பதில் / தகவலினை ஒருமாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20728/SCIC/2022</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வண்டலூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு க. கணேஷ்,
பழைய எண்.66A/6A. புது எண்.11A,
மெட்டு 3வது தெரு, சாத்துமாநகர்,
திருவொற்றியூர், சென்னை 600 019

Copy to: File TK/PS